மண்ணியாற்றின் குறுக்கே பாலம்.

* 365 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் தொகுதி, மாயூரம் யூனியனில் உள்ள தருமதானபுரம் பஞ்சாயத்தில், மண்ணியாற்றின் குறுக்கே பாலம் கட்டும் பணி எந்த நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தருமதானபுரம் ஊராட்சியிலுள்ள மண்ணியாற்றின் குறுக்கே பாலம் கட்டும் பணி, கிராமப் பணித் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்டு தளம் மட்டம் (Deck State level) வரை செய்து முடிக்கப்பட்டுள்ளது.

Traffic safety lessons in schools.

* 366 *Q.*—Thiru N. DENNIS : Will the Hon. Minister for Transport be pleased to state—

(*a*) whether it is a fact that the Police Commissioner has arranged for conducting traffic safety lessons in the Educational Institutions in Madras ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(இ) சென்னை காவல்துறையைச் சார்ந்த போக்குவரத்துக் கட்டுப்பாட்டு பிரிவு அதிகாரிகள் கல்வி நிலையங்களின் தலைவர்களுடன் தொடர்பு கொண்டு பயிற்சிக்கு விருப்பம் தெரிவிக்கும் மாணவர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. சாதாரணசாலை விதிகளைப் பற்றிய கோட்பாடுகளும், நடைமுறைகளும் கற்றுக் கொடுக்கப்படுகின்றன.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : பேரவைத் தலைவர் அவர்களே, அண்மையில் பஸ்ஸின் கூரையிலும், படிக்கட்டிலும் பல பயணிகள் யாத்திரை செய்து கொண்டிருக்கிறார்கள். அதுவும் குறிப்பாக மாணவர்கள் இவ் விதம் செய்கிறார்கள். இதனால் ஒரு சிலர் உயிரிழந்தும் இருக்கிறார்கள். ஆகவே, இதைத் தடுக்க அரசாங்கம் இப்போது என்ன நடவடிக்கை எடுத்து வருகிறது ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்திருக்கிற அந்தக் கவலையை வரவேற்கிறேன். இப்படி புட்போர்டிலும், பஸ் மேலிடங்களிலும் பயணம் செய்வது ஆபத்தானது என்பது பொதுமக்களுக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதோடு அல்லாமல் எதிர்க்கட்சித் தலைவர் கூறியதைப் போல உயிருக்கே ஆபத்து ஏற்படுகிறது. அதைக் கட்டாயம் தடுக்க வேண்டுமென்று காவல் துறையினருக்கு ஆணை பிறப்பிக்கப்பட்டு, அவர்கள் அப்படிப் பயணம் செய்பவர்கள் மீது நடவடிக்கை எடுத்து வருகிறார்கள்.

1974 மார்ச் 11]

திரு. கே. டி. கே. தங்கமணி: இப்போது டிராபிக் என்போர்ஸ்மென்டைப் பொறுத்த வரை மாணவர்கள் போலீசாருக்கு உதவியாக இருக்கிறார்கள். அதுவும் இந்தத் திட்டத்தின் கீழ் வருகிறதா? அப்படியானால், கல்லூரிகளில் இருக்கக்கூடிய மாணவ மாணவிகளுக்கும் கூட இதில் இடம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தின் அடிப்படையில் இப்போது சில மாணவர்கள் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க விதி முறைகளை அனுசரிப்பதில் ஈடுபட்டிருக்கிறார்கள். கல்லூரியில் உள்ளவர்கள் அவர்களாகவே முன் வந்தால் அவர்களுக்கும் இந்தப் பயிற்சியை அளிக்கலாம். போக்குவரத்தில் ஏற்படுகிற ஆபத்தினை உணர்த்தி, எந்த எந்த முறையில் விதிகளைப் பின்பற்ற வேண்டும் என்கிற உணர்வினை அளிக்கின்ற முறையில்தான் இப்போது இந்தத் திட்டம் அமல் செய்யப்படுகிறது.

திரு. முனு ஆதி: தலைவர் அவர்களே, தாம்பரத்தில் இருந்து நானும் வரும்போது பார்க்கிறேன். போக்குவரத்து வண்டிகளை அங்கங்கே நிறுத்தி மேல் கூரையில் 20 மூட்டைகளுக்குமேல் கூரையே பிய்ந்து விழுந்து விடுமோ என்று அஞ்சுகிற முறையில் போட்டு வருகிறார்கள். இதனால் விபத்து ஏற்படக்கூடிய வாய்ப்பு இருப்பதனால் இந்த முறை தவிர்க்கப்படுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, அத்தகைய ஆபத்து எதுவும் நிகழ்ந்ததாக இதுவரை இல்லை. ஆயினும் மாண்புமிகு உறுப்பினர் அதுபற்றிய தகவலை என் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஒரு குறிப்பிட்ட நபர் இவ்வளவு எடைக்கு மேல் எடுத்துப் போகக் கூடாது என்கிற விதி இருக்கிறது. இதை எப்படி எடுத்துப் போகிறார்கள் என்பதை கவனிக்கிறேன்.

ஆரம்பாக்கத்திலிருந்து பேருந்துப்பணி.

* 367 வினா—திரு. கா. வேழவேந்தன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கும்முடிப்பூண்டி துணை வட்டம், ஆரம்பாக்கம் முதல் திருவள்ளூருக்கும்—பொன்னேரிக்கும் பேருந்துப் போக்குவரத்து ஏற்படுத்துவதில் ஏற்படும் காலதாமதத்திற்கும் காரணங்கள் யாவை?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: பொன்னேரி, கும்மிடிப்பூண்டி, ஊத்துக் கோட்டை, திருவள்ளூர் ஆகிய இடங்களில் கிளை பணி மனைகளைக் கட்டுவதற்கான நிலம் கையகப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவ்விடங்களில் பணி மனைகள் கட்டி முடிக்கப்பட்ட பின்னரே, ஆரம்பாக்கம், திருவள்ளூர், பொன்னேரி ஆகிய இடங்களை இணைக்கும் வகையில் புதிய பேருந்துகள் விடுவது பற்றி பல்லவன் போக்குவரத்து கழகம் பரிசீலிக்க இயலும்.